ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2082/32 - 2018 අගෝස්තු මස 01 වැනි බදාදා - 2018.08.01
*2082/32 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி 21/78* (xv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்ற, 1995, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2018, சனவரி மாதம் 29 ஆந் திகதிய 2056/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இலுள்ள "தொழில்நுட்பவியல் பீடம்" என்னும் விடயத்தையும் அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள அதனது நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வரும் விடயம் மற்றும் பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

| | | |
|---|---|---|
| "மருத்துவ பீடம் | 1. | உடற் கூற்றியல் துறை |
| | 2. | உயிரி இரசாயனவியல் துறை |
| | 3. | உடலியக்கவியல் துறை |
| | 4. | ஒட்டுண்ணியல் துறை |
| | 5. | நுண்ணுயிரியல் துறை |
| | 6. | தடவியல் மருத்துவத் துறை |
| | 7. | நோய்க்கூற்றியல் துறை |
| | 8. | சமூக மருத்துவத் துறை |
| | 9. | குடும்ப மருத்துவத் துறை |


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"மருத்துவ பீடம் *(தொடர்ச்சி)*

10. மருந்தகத் துறை
11. சத்திரசிகிச்சைத் துறை
12. மருத்துவத் துறை
13. குழந்தை மருத்துவத் துறை
14. மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை
15. மனநல மருத்துவத் துறை.".

கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ,
உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, யூலை 31.

08- 538

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.